Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அம்பர் பிரம்மபுரீஸ்வரர் கோயில் சிற்பங்கள் - ஓர் பார்வை

ஜெ.ச. சித்ரா[1] & முனைவர். பா. ஷீலா[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், சிற்பத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

[2] பேராசிரியர் (ம) பதிவாளர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழம், கொடைக்கானல்

**ஆய்வுச்சுருக்கம்**

அம்பர் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் நன்னிலம் வட்டம் மயிலாடுதுறை – பூம்புகார் பூந்தோட்டத்திற்கு அருகிலுள்ள வழித்தடத்தில் அரிசிலாற்றங்கரையில் அமைந்த காவேரி தென்தலங்களுள் தேவாரப் பாடல் பெற்ற ஸ்தலமாக அமைந்துள்ளது. அம்பர், அம்பல் என புரான வரலாற்றிலும் இலக்கியங்களில் அம்பர் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தலம் சிவத்தலங்களுள் 54-வதாகக் கருதப்படுகிறது. சங்க பாடல்களில் புறநானூற்றில் 385-வது பாடலில் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. கோச்செங்கண் சோழனால் எழுப்பப்பட்ட 72 மாடக்கோயில்களில் இத்தலமும் ஒன்று. இத்தலத்தில் அனைத்து படிமங்களும் காலத்தால் அழியாதவையாகவும், சிறப்புமிக்கதாகவும் காணப்படுகிறது.

சங்க இலக்கியங்கள், கல்வெட்டு சான்றுகள், தொல்பொருள் அகழாய்வுகள் போன்ற தரவுகள் மூலமாக அம்பர் பிரம்மபுரீஸ்வரர் கோயிலின் வரலாற்றையும், சிற்ப வடிவத்தின் காலத்தினையும் இவ்வாய்வு மூலமாக அறியப்படுகிறது.

திறவுச்சொற்கள்

படிமங்கள், ஜடாமகுடம், மகர குண்டலம், பத்ர குண்டலம், உதரபந்தம், புரிநூல், அட்டிகை, பாசரங்கள்.

முன்னுரை

தமிழக வரலாற்றில் கோவில்கள் சமூகத்தின் மையப்புள்ளியாக மாறின. இடைக்காலத்தில் பெரும் பகுதியை ஆட்சி செய்த சோழர்கள் காவிரியின் ஆற்றுப்படுகையில் சைவ, வைணவ ஆலயங்களை உருவாக்கி அதன் மூலம் சமய மரபுகளை சமூகத்தில் ஊடுருவச் செய்தனர். சமய மரபுகளின் வளர்ச்சிக்கு திருவிழாக்களையும் அதற்கான படிமங்களையும் கோயில்களில் உருவாக்கினார்கள். இப்படிமங்கள் நம் முன்னோர்களின் கலை, பண்பாடு, நாகரீக சிறப்புகளின் அழியாத சான்றுகளாக இன்றளவும் திகழ்கின்றன.

இந்து மதத்தில் படிமங்களின் தோற்றம் என்பது புத்த மதத்தின் கொடையாகக் கருதப்படுகிறது. (மு.பொ.ஆ) 2500 ஆம் ஆண்டு சிந்து சமவெளி நாகரிகத்தில் மக்கள் உருவ பழிபாட்டு மரபினை பின்பற்றினர் என்பதை இங்கு கிடைத்துள்ள இறை உருவங்களின் அடிப்படையில் அறிந்துகொள்ள முடிகிறது.

இதற்கான முதல் சான்று குடிமல்லத்திலுள்ள பரசு ராமேஷ்வரர் சுவாமி கோயிலில் உள்ள படிமம். இவை வரலாற்று கால வளர்ச்சி, புராணங்கள், தல புராணங்கள், பக்தி இலக்கியம் போன்ற பல்வேறு காரணங்களால் வளர்ச்சி பெற்றன. இவ்வளர்ச்சியின் வெளிப்பாடாக பல்வேறு இறைவுருவங்கள் உருப்பெறத் தொடங்கின. இத்தகைய உருப்பெற்ற கலைக்கூறுகள் காலத்திற்கு

ஏற்ப தனித்தன்மை பெற்றதாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் பல்வேறு கலைகள் வளர்ச்சியடையத் திருகோயில்கள் ஆற்றிய பங்கு மிகப் பெரியதாகும். பல்லவர்கள் காலத்தில் தமிழகத்தின் கலைத்துறையில் நிலையான சாதனைகள் உருவாயின. பிற்காலச் சோழர்கள் பல்லவர்களின் கலைப்பாணியைப் பின்பற்றி தமிழகத்தின் கலைத்துறையில் மேன்மேலும் சிறப்பு பெற உதவினார்கள். சோழர்களின் காலத்தில் சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, கூத்துக்கலை ஆகியவைகள் கோயில்களில் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.

பல்லவர்கள் காலத்தில்தான் முதலில் கல்லில் கலை வண்ணத்தை எல்லாம் சிறப்புறத் காட்டி சிற்பக்கலையின் சிறப்பினை உலகமெங்கும் பரவும்படி செய்தனர். அதன்பின் சோழர்கள் காலத்தில் செதுக்கிய சிற்பங்கள் கண்களை கவரக் கூடியதாகவும், உயிரோட்டம் நிறைந்ததகாவும் இருந்தன. சோழர்கள் செதுக்கிய சிற்பங்கள்தான் சுவர்களையும், தூண்களையும், மேற்கூறைகளையும் மற்றும் மண்டபங்களையும் அலங்கரித்தன.

சங்க காலம் முதல் விஜய நகர, மராட்டிய காலத்தில் மன்னர்களின் ஆதிக்கம்கீழ் சிற்ப படிமங்கள் தொடர்ந்து பல்வேறு வளர்ச்சியை அடைந்தது என இவ்வாய்வு மூலம் அறிய முடிகிறது.

அம்பர் பிரம்மபுரீஸ்வரர் கோயில் சிற்பங்களும் காலங்களால் மாறுபட்ட நிலையிலிருந்து உருவ வளர்ச்சிப் பெற்று இன்றளவும் சிறப்புடன் திகழ்கிறது,

அமைவிடம்

மயிலாடுதுறை பூந்தோட்டத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் காவேரி படுகையான அரிசிலாற்றங்கரையில் அமைந்துள்ளது. இந்த அம்பர் என்ற ஊர் நாளடைவில் அம்பல், அம்பர்மாகாளம் எனவும் அழைக்கப்பட்டு வருகிறது. இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் இவ்வூர் ”அம்பர்மாகாளம்” என அழைக்கப்படுவதை காணலாம். [1]

கோச்செங்கசோழனால் ”என்தோள் ஈசனுக்கு எழுபத்தி இரண்டு” கோயில்களை எழுப்பியதாக திருமங்கை ஆழ்வார் தனது பாசுரங்களின் குறிப்பிட்டுள்ளார்கள். (பெரிய திருவாய் மொழி – 15) [2]

பெயர்க்காரணம்

இத்தலத்திற்கு திருஅம்பர், அம்பர், அம்பல், இந்திரபுரி, பிரம்மபுரம், பிரம்மபுரி, திருவம்பர் மாகாளம் என பிற பெயர்களும் உண்டு. ஒரு சமயம் தேவர்களை அம்பன், அம்பரான் என இரு அரக்கர்கள் துன்புறுத்தியதால் தேவர்கள் ஈசனிடம் முறையிட அதன்படி இருவரும் காளியால் வதம் செய்யப்பட்டனர். இதனால் இத்தலம் “அம்பலராயபுரம்” எனவும் அழைக்கப்பட்டது.[3]

இலக்கியங்களில் அம்பர்

சங்க இலக்கியபுலவர் “கல்லாடனார்” “காவேரி அணையும் தாழ்நீர் படர்பை நெல் விளை கழனி அம்பர் புல்லிய நல்லரு வந்தை வாழிய புல்லிய” (புறம் 385)[4]

என புகழ்ந்து பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் தனது திருமறையிலும், அருணகிரிநாதர் – திருப்புகழும் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர் தெய்வத்தின் சிறப்பை

“சங்கணி குழையினர் சாமம்
பாடுவர் வெங்கனல் கனல்தர
விழவமர் அம்பர் மாநகர்ச்
செங்கண்ணல் இறைசெய்த
கோயில் சேர்வரே[5]

என தனது தேவாரப் பதிகத்தில் பாடியுள்ளார்.

கல்வெட்டு செய்திகள்

ஒரு நாட்டின் தொன்மை நிகழ்வுகளை அளிப்பதில் இலக்கியங்களும், கல்வெட்டு செய்திகளும் முதன்மை சான்றாக அமைந்துள்ளன. இத்தலத்தில் இராஜராஜசோழன், முதலாம் பராந்தகன், முதலாம் குலோத்துங்க சோழனது 4 கல்வெட்டுகள் உள்ளன. [6]

அகழாய்வு ஆதாரங்கள்

அம்பரின் நடந்த அகழாய்வின் மூலம் இரும்புகால தொடக்கத்திலிருந்தே பழந்தமிழ் குடிகளின் வாழிடமாக அம்பர் பகுதி விளங்கியதை அறியமுடிகிறது. இங்கு செப்பு மற்றும் இரும்புக் கலைப்பொருட்கள் சேகரிக்கப்பட்டு உள்ளன. குறிப்பாக அம்மக்கள் உயர் கார்பன் எக்வினால் ஆன கோடாரி போன்ற உலோகக் கருவிகளை பயன்படுத்தியமை அறிவியல் பூர்வமான ஆய்வின் வழியாக அறிய முடிகிறது. வங்காள விரிகுடாவின் அருகில் இப்பகுதி அமைந்துள்ளதால் அக்கால மக்கள் இலங்கை மற்றும் மற்ற நாடுகளுடன் வர்த்தக மற்றும் பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்ததை நாம் அறிய முடிகிறது. இவ்வாறாக அம்பல் என்று ஊரின் வரலாற்றை இவ்வாய்வின் மூலம் நான் நன்கு தெளிவாக அறிந்துக்கொள்ள முடிகிறது.[7]

அமைப்பும் சிறப்பும்

இத்திருக்கோயில் மாடக்கோயில் அமைப்புடையது.[8] அம்பர் ஊரில்தான் 63 நாயன்மார்களில் ஒருவரான “சோமாசிமாறநாயனார்” அவதரித்து தேவார பாடல் ெற்ற தலம்: திருஞான சம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர். இத்தலத்தை பிரமன் வழிபட்டார் என ஸ்தல வரலாறு கூறுகிறது. இங்கு பிரம்மபுரீஸ்வரர் சுயம்பு மூர்த்தியாக காட்சியளிக்கிறார். சோமாசிமாற நாயனாருக்கு இறைவன் இறைவி நேரடியாக காட்சி தந்தருளிய தலம். இத்தலம் யானையேறாதவாறு படிக்கட்டுகள் அமைத்துக் குன்றுபோல் அமைக்கப்பட்ட மாடக்கோயிலாகும்.

சிற்பக்கலை நின்ற, அமர்ந்த, கிடந்த நிலையில் தோற்றம் காட்டும் தெய்வ உருவங்கள் “சித்திரம்” சித்தார்த்தம்” மற்றும் சித்ராபாசம்” என் மூன்று வகையுண்டு. “சித்திரம்” என்ற உருவம் எல்லா பாகமும் வெளிகாட்டக் கூடியதாகவும், முழு உருவச்சிற்பமாக காணப்படும.

இரண்டாவது சித்தாந்தத்தில் முழுப் பகுதியும் தெரியாமல் முன்பகுதி மட்டுமே வெளிக்காட்டப்படும். இவ்வகையை புடைப்புச் சிற்பங்கள் என்பர்.

மூன்றாவதாக “சித்ரபாசம்” என்பது சுவரின் மீதோ, துணியின் மீதோ வரையப்பட்ட தெய்வ உருவங்களை குறிக்குமென்பர்.[9]

சிற்பம் என்பது ஒரு முப்பரிமாணக் கலைப்பொருள் அல்லது நெகிழ்வுத் தன்மை கொண்ட பொருட்களுக்கு உருவம் கொடுப்பது மூலம் உருவாக்கப்படுகிறது. பொதுவாகச் சிற்பங்கள் செய்வதற்கு பயன்படும் பொருட்கள் கற்கள், உலோகங்கள், மரம், மண் என்பன அடங்கும். சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பி எனப்படுகிறார். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து சிற்பக்கலை வளர்ந்து வருகின்றது. மனித நாகரீகத்தையும், அதன் வளர்ச்சிக் கூறுகளையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலை இன்றியமையாத ஒன்றாக உள்ளது.[10]

அம்பல் பிரம்மபுரீஸ்வரர் கோவில் சிற்பங்கள்

சிற்பங்கள்

கல்வெட்டுகளாலும், சிற்பங்களாளும் இழைக்கப்பட்டிருக்கும் பிரம்மபுரீஸ்வர் கோயில் சிறப்பிற்குரிய கலைப்படைப்பாகும். இக்கோயிலில் உள்ள சிற்பங்கள் பேரளவின இடைநிலையின சிறியனவை என மூவகைப்படுத்தலாம். பேருருவச் சிற்பங்களாக முக மண்டபக் காவலர்களும், பூங்குழலி நாயகி சிற்பங்கள் இடைநிலையினவாக இறைவன், தேவ கோட்டச் சிற்பங்களையும், உள் சுற்றுக் சிற்பங்களையும் கொள்ளலாம். இவை அனைத்தும் முற்கால சோழர் கால கலைத்திறனை பேசுகின்றன.[11]

1. பேருருவச் சிற்பங்கள்.
2. பூங்குழலி அம்மன், இறைவன், தேவக்கோட்ட சிற்பங்கள்.
3. திருசுற்றுச் சிற்பங்கள்.

பேருருவச் சிற்பங்கள்

நெடிய திருமேனியராய் விளங்கும் இறைத்திருமுன் காவலர்களில் உள்ள வலது, இடது துவார பாலகர்கள் உருவம் வாயிலின் நுழை வாயிலில் கம்பீரமாக காட்சியளிக்கிறது. தன் இடது காலைப் பீடத்தில் ஊன்றி, வலது காலைக் கதாயுதத்திலிருந்து வெளிப்படும் பெரிய நாகத்தின் தலை மீது கொண்டு இரண்டு கைகளுடன் காட்சியளிக்கிறது. வாயில் காப்பாளரின் வலது கை விஸ்மய முத்திரையில் வியக்கும் கரமாக அமைந்துள்ளது. இடது கை நீண்ட கதையின் மேல் முனையில் அமைந்துள்ளது.

தலையில் சுருண்ட கேசங்கள் அலங்கரிக்கும் உயர்ந்த சடை முடியும், பக்கங்களில் விரிந்து சுருண்ட தாழ் சடையும் அலங்கரிக்கின்றன. மகுடத்தின் முன்புறம் இரு மகரங்களின் நடுவே கீர்த்தி முக அணியும், மேல் நெற்றியில் முத்துக்கள் அலங்கரிக்கும் நெற்றிப் பட்டமும், காதுகளில் சிறகு விரியப் பறக்கும் அன்னப்பறவைக் குண்டலங்களும், தோள் பட்டைகள் மீது தோள் மாலையும், மேல் கைகளில்

சிம்ம முக முகப்புடைய கேயூரமும், கழுத்தில் பொன் நாணும், கற்கள் பதித்த பட்டையான சரப்பளியும், அரும்புச்சரமும், மணிகள் கோர்த்த மாலை நீண்ட அங்கியாகக் காட்டப்பட்டுள்ளது. கீழ் வயிற்றில் பூணூலும், மேல் வயிற்றில் உதரபந்தமும், இடுப்பிலிருந்து முழங்காலுக்கு மேல் தொடை வரை ஆடையும், இரட்டைப் பிரிப்பொன் நாணும், கடிபந்தமும், தொடையின் பக்கங்களில் வனப்போடு வளைந்து முழங்காலின் கீழ் வரிசையில் சரிந்து தொங்கும் ஆடைகட்டும், கால்களில் மணிகள் கோத்த பாதசரமும், கர்ஜனைச் செய்யும் முகப்பாவமும் சோழர்கால கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது. வலது, இடது துவார பாலகர்கள் சிற்பம் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

துவார விநாயகர்

துவார விநாயகர் சிற்பம் நின்ற நிலையில் யானை முகத்துடன் தலையில் கரண்ட மகுடத்துடன் இடம்புரி விநாயகராக அமைக்கப்பட்டுள்ளது. மார்பில் யக்ஞோபவிதம் அணிந்தும், நான்கு கைகளுடன் சங்கும் சக்கரமும், கீழிரு கைகளில் ஒரு கை சுஜின் முத்திரையும், மற்றொரு கை மோதகத்தையும் அதனை தும்பிக்கை இடது புறமாக தொடுவது போன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

தேவக்கோட்டச்சிற்பம்

தட்சிணாமூர்த்தி

அம்பல் பெருந்திருக்கோயில் தென்திசை மாடத்தில் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் தென் முக கடவுளான தட்சிணாமூர்த்தியின் சிற்ப வடிவம் இருந்தது. கால வெள்ளத்தில் சிதைக்கப்பட்டு மீண்டும் விஜய நகர காலத்தில் புதிதாய் வடித்துள்ளனர். இச்சிற்பம் கயிலை மலையில் வீராசனத்தில் வீற்றிருக்கும் நிலையில் காட்சியளிக்கிறது. இவ்வுருவத்தின் இரு புறமும் கனகாதிமுனிவர்கள் நால்வர் வியாக்கியானம் கற்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.

தென்முக கடவுளான இவ்வுருவம் இடக்ககாலை மடித்து, வலக்காலை தொங்கவிட்டு நான்கு கரங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. தலையில் ஜடா பாரமும், ஜடாமுடி சுருண்டு விரிந்து இருப்பக்கத்திலும் எழிலாக சரிந்துள்ளது. நெற்றியில் நெற்றிப்பட்டமும், வலதுக் காதில் மகரக்குண்டலமும், இடக்காதில் வட்டமான பத்ரக் குண்டலமும், கழுத்தில் முத்து மாலை, உத்ராட்ச மாலை, இரு கழுத்தணிகள் கொண்டும் இச்சிற்பத்தினை அணிச்செய்கின்றது. இடது தோளிலிருந்து புரிநூல் சரிந்து வலது வயிற்றின் மீது வீழ்ந்துள்ளது. மேல் வயிற்றில் சிறு முத்துக்கள் கோர்த்த உதர பந்தமும் காணப்படுகிறது. மேல் தோளிலும், முன் கைகளிலும் தோள்வளை, கை வளை காட்டப்படவில்லை. வலது திருவடியின் கீழுள்ள முயலகன் மண்டியிட்ட நிலையில் முகத்தைப் பக்கவாட்டில் திருப்பியுள்ளான்.

தட்சிணாமூர்த்தியின் பரந்த முகம், அகன்ற நெற்றி, தூக்கிய புருவம், கீழ்நோக்கி பார்வை செலுத்தும் அரைக்கண்கள், எடுப்பான மூக்கு, குறுங்கழுத்து, விரிந்த அழகிய தாழ்வால், அளவான உடற்கட்டு யாவும் கொண்ட நிலையில் இவ்வுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்ப வடிவின் அமைப்பும், தலைக்கோலமும், ஆடை அணிகளின் தோற்றமும் கொண்டு இச்சிற்ப வடிவினை பொ.ஆ 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜய நகர கலைப்பாணியாகக் கருதலாம்.

பிரம்மா

வடதிசையை நோக்கியுள்ள பிரம்மாவின் சிற்பம் அம்பலில் வெளிப்பிரகார மேற்குப் புறச்சவரின் தேவகோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. நான்கு கரங்களும், மூன்று தலைகளும், கொண்ட பிரம்மாவின் இச்சிற்பம் பத்ம பீடத்தின் மீது சம பங்கத்தில் நேராக நின்ற கோலத்தில் காணப்படுகிறது. மேல் வலக்கை கத்தரி முத்திரையில் உருத்திராட்ச மாலையும் கீழ் வலக்கை அபய முத்திரையில் அருள்கரமாகவும், இடக்கை கட்டிய வலம்பித முத்திரையிலும் அமைந்துள்ளது.

பிரம்மாவின் தலையை உயர்ந்த ஜடாமகுடம், நெற்றியில் இரத்தின பட்டமும், காதுகளில் உருத்திராட்ச குண்டலங்களும், கழுத்தில் கண்ட சரமும், பிறை வடிவான சரப்பள்ளியும், இடது தோளில் புரிநூலும், மேல் வயிற்றில் உதரபந்தமும், தோள்களில் தோள் வளையமும், முன் கையில் உருட்டு வளையல்களும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை அழகாக வடிவமைக்கப்பட்ட மடிப்புகளுடைய பட்டாடையும், காலில் பாதசரமும் இச்சிற்பத்தினை அலங்கரிக்கிறது.

இச்சிற்பத்தின் கலைப்பாணி, வட்ட வடிவ முக அமைப்பு, நீண்ட மெலிந்த உடல்வாகு, ஆடை அணிகலன்களின் தன்மை யாவும் கொண்டு இதனை பிற்கால சோழர் கால கலைப்பாணியாகக் கருதலாம்.

விஷ்ணு

தேவகோஷ்டத்தின் மேற்குப்புறத்தில் விஷ்ணுவின் நின்ற கோல சிற்பம் அலங்கரிக்கிறது. சதுர்புஜங்களில் மேல் வலக்கரம் கத்தரி ஹஸ்திரத்தில் பிரயோகச் சக்கரத்தை பற்றியுள்ளது. மேல் இடக்கரம் கத்தரி ஹஸ்திரத்தல் சங்கினை செங்குத்தாக பற்றியுள்ளது. கீழ் வலக்கரம் அபய ஹஸ்த்திரத்தில் அருள் பாலிக்கும் கரமாக அமைந்துள்ளது. விஷ்ணுவின் கீழ் இடக்கரம் தொடை மீது சிம்ஹகர்ண ஹஸ்தத்தில் காணப்பபடுகிறது. தலையை அழகிய கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. மேல் நெற்றியில் இரத்தின பட்டமும், காதுகளில் மகர குண்டலமும், காதுகளின் மேல் செவிப்பூக்கள் செருகப்பட்டுள்ளன. கழுத்தில் கண்டசரமும், சரப்பள்ளியும் இச்சிற்பத்தினை அழகுச் செய்கிறது. இடுப்பிலிருந்து முழங்கால் வரை அலை அலையான மடிப்புடைய பீதாம்புரம் இடம்பெற்றுள்ளது இதன் காலம் பொ.ஆ 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியை சார்ந்த முதலாம் இராஜேந்திரன் காலத்தில் சிற்பக்கலையாகக் கதுதலாம்.

துர்க்கை

அகநானூற்றில்

“ஓங்கு புகழ் கானமர் செல்வி” எனக்

கொற்றவையைக் குறிப்பிடுகிறது.

கலித்தொகையில்

“கொற்றியென்றும் அறியப்பட்ட கொற்றவை என்ற வரிகளாலும் அறியலாம்.

அர்த்த மண்டபத்தின் வடக்குப் புறச்சுவரில் பிரம்மாவிற்கு சற்று கிழக்கே துர்க்கையின் சிற்பம்

வடக்கு நோக்கி காணப்படுகிறது. இத்துர்க்கையின் தலையில் கரண்ட மகுடமும், கைகளில் சங்கு, சக்கரம், வலது கீழ்கரம் தாமரை பீடத்தில் நின்ற நிலையில், காதுகளில் மகர குண்டலம் அணிந்தும் மிக நேர்த்தியாக இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சண்டிகேஸ்வரர் (பரிவார ஆலயம்)

இச்சிற்பம் பொதுவாக சிவன்கோயிலின் திருச்சுற்றின் வடதிசையில் காணலாம். பொதுவாக சண்டிகேஸ்வரர் சிற்பம் அமர்ந்த நிலையில் காணப்படும். இத்திருக்கோயிலில் இச்சிற்பம் கிழக்கு திசையில் பரிவார ஆலயத்தில் சுகாசனத்தில் இரண்டு கரங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. சடாமகுடம், புரிநூல், ஆரம், கால்காப்பு, பாதச்சரம், மடிப்பான கீழாடையும் அணிந்து அழகாகக் காட்டப்பட்டுள்ளது. இவரது வலக்கரம் பரசையும் இடக்கரம் தொடை மீது வைத்தவாறும் காட்டப்பட்டுள்ளது.[12]

திருச்சுற்று சிற்பங்கள்

முருகன் வள்ளி தெய்வானை

முருகன்: இச்சிற்பம் சதுரமான பீடத்தின் மேல் வலது காலை ஊன்றி, இடதுக்காலைச் சற்று முன் வைத்து இடுப்பை வலப்புறமாக ஒடித்து நிற்கும் நிலையில் நான்கு கரங்களுடன் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. பின் வலக்கரம் கத்தரி முத்திரையில் சக்திப்படையையும், இடக்கரம் கத்திரி முத்திரையில் வஜ்ஜிராயுதத்தையும் பற்றியுள்ளது. முன் வலக்கரம் நீண்ட அம்பைப் பற்றும் பாவனையில் கடக முத்திரையில் மிக நேர்த்தியாக சோழர் கலைப்பாணிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது.

கரண்ட மகுடம் தலையை அலங்கரிக்கவும் காதுகளை மகர குண்டலமும், கழுத்தில் கண்டசரம், மணிவடம், சரப்பள்ளியும் அலங்கரிக்க, இடையில் கீர்த்திமுக கச்சையும், வலது முழங்காலின் கீழ் கிண்கிணியும், காலில் கழலும் பாதசரமும் கொண்டு இச்சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் காலம் பொ.ஆ 10, 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம்.

வள்ளி:

இச்சிற்பம் நின்ற கோலத்தில் இடது கையில் தாமரை மலரையும், வலது கையைத் தாழ்கரமாகக் கொண்டும் காட்டப்பட்டுள்ளது. தலையில் கரண்ட மகுடமும் காதுகளில் மலர்க்குண்டலமும், கழுத்தில் பதக்கமும், கீழ் வயிற்றில் சன்ன வீரமும், இடையில் ஆடையும், மேல் கையில் பூரிமம் முகப்புடைய தோள்வளையும், காலில் தண்டையும் கொண்டு அழகாக செதுக்கப்பட்டுள்ளது.

தெய்வானை

ஆறுமுகனின் இடதுபுறம் காணப்படும் இச்சிற்பம் வலது கையில் அல்லி மலரை ஏந்தி, இடக்கையைத் தாழ்கரமாகக் கொண்டு தனித்து நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றது. தலையில் கரண்ட மகுடம், காதில் மகர குண்டலமும், கழுத்தில் கண்டசரமும், மணியாரம், பதக்கம் கோர்த்த

மணிமாலை, பூணூல், தோள்களில் தோள்வளை, இடைக்கச்சை, கால்களில் பாதசரமும், யாவும் அம்மனை அணிச்செய்கிறது.

பிள்ளையார்

திருச்சுற்று வளாகத்தில் தென்கிழக்குப் பகுதியில் இம்மூன்று சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

பிள்ளையார் (1)

இச்சிற்பம் இளம் குழந்தையைப் போன்று கால்களை தளர மடித்த நிலையில் நான்கு கரங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேல்கரம் இரண்டும் கடக முத்திரையில் காட்டப்பட்டுள்ளது. கரங்களில் அங்குசம் பாசமும், கீழ் வலக்கரம் கடக முத்திரையில் காட்டப்பட்டுள்ளது. கீழ் இடக்கரம் இடது தொடை மீது ஊறு முத்திரையில் அமைந்துள்ளது.

விநாயகரின் யானை முகமும், மானிட உடலும், நீண்ட ஒடுங்கிய தோற்றத்துடன் எழிலாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நெற்றியில் கற்கள் பதித்த கரண்ட மகுடமும், கழுத்தில் தட்டையான காரை எனும் கழுத்தணி அலங்கரிக்கிறது. இவரது துதிக்கை இடம்புரியாக வளைந்து மோதகத்தை பற்றியுள்ளது. இச்சிற்பத்தின் அமைப்பைக்கொண்டு பொ.ஆ 10-ஆம் நூற்றாண்டு, முந்திய சோழர் கலைப்பாணியாகக் கருதலாம்.

பிள்ளையார் (2)

தாமரை பீடத்தின் மீது இடக்காலை மடித்து வலக்காலை குத்திட்டு நான்கு கரங்களுடன் லலிதாசனத்தில் அமைந்துள்ளது. மேல் வலக்கரம் அங்குசத்தையும், மேல் இடக்கரம் பாசத்தையும் கடக முத்திரையில் கொண்டுள்ளது. கீழ் வலக்கரம் ஒடிந்த தந்தைத்தையும், கீழ் இடக்கரம் மோதக உருண்டையையும் ஏந்தியுள்ளது. கழுத்தில் மணிவடம் சவடி போன்ற கழுத்தணியும், இடது தோளில் எக்ஞோனபவீதம் எனும் புரிநூலும் காட்டப்பட்டுள்ளது.

பிள்ளையார் (2)

பத்மபீடத்தில் இடக்காலை மடித்து, வலக்கலை குத்திட்டு நான்கு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கைகளில் அங்குசமும் பாசமும், கீழ் வலக்கரம் கடக முத்திரையிலும், கழுத்தில் மணிவடம், இடையில் கச்சையும் இச்சிற்பத்தினை அணிச்செய்கின்றன. கரிய நிறக்கல்லில் இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பு ஆகும் இச்சிற்பத்தின் தோற்றம், முகப்பொலிவு, ஆடை அணிகள், ஆயுதங்களின் தன்மைக் கொண்டு இதனை பொ.ஆ.10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, இடைச்சோழர் கலைப்பாணியாக கருதலாம்.

திருச்சுற்றின் முன்புறச்சிற்பம்

பைரவமூர்த்தி:

அம்பல் பிரம்மபுரீஸ்வரர் கோயிலில் மூன்று பைரவ சிற்பம் காணப்படுகிறது.

பைரவர் (1) பெரியது

வடகிழக்கு திசையில் மேற்கு நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது இவ்வுருவம் இருகால்களை பத்மபீடத்தின் மீது நேராக ஊன்றி நான்கு கரங்களுடன் ஆடை அணியா அடிகளாக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. மேல்வலக்கரம் கடக முத்திரையில் உடுக்கையை பற்றியுள்ளது. கீழ்வலக்கரம்

திருசூலத்தண்டையும், கீழ்இடக்கரம் கபாலத்தையும் ஏந்தியுள்ளது. தலையை சுடர் எனும் சுவால மகுடமும், நெற்றியில் வட்டமும், வலது காதில் மகரக் குண்டலமும், இடது காதில் பத்திரக் குண்டலமும், கழுத்தில் கண்டசரமும், மேல் வயிற்றில் உதரப்பந்தமும், புஜங்களில் கேயூரமும், இடையில் அரைஞானும், பின்புறம் நாய் வாகனத்துடன் இச்சிற்பம் அழகுச் செய்கிறது. இச்சிற்பத்தின் வடிவமைக்கொண்டு பொ.ஆ. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த சோழர் கலைப்பாணியாகக் கருதலாம்.

பைரவர் (2) சிறியது

இவ்வுருவம் சிறியது. இச்சிற்பம் ஆடை அணியா திகம்பர வடிவில் காட்சியளிக்கிறது. அனல் கேசத்தையும், கழுத்தில் கண்டசரம், சவடியும், காதுகளில் மகரகூடும் பத்ர குண்டலங்களும், நாகத்தை அரைஞானாக அணிந்தும் நின்றக் கோலத்தில் இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. நீள சதுர முகமும், விரிந்த நெற்றி, திறந்த கண்கள், புடைத்தநாசி, கோரைப் பற்களும் இவ்வுருவினை மேலும் அழகுப்படுத்துகிறது. இச்சிற்ப வடிவினை இடைச் சோழர் கால கலையாகக் கருதலாம்.

பைரவர் - 3 (சிறியது)

இச்சிற்பத்தில் இரண்டு கரங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவம் பத்மபீடத்தில் நேராக நின்ற கோலத்தில் காணப்படுகிறது. சுவால மகுடமெனும் சுடர்முடி தலையை அலங்கரிக்கிறது. காதுகளில் குண்டலங்களும், கழுத்தில் ஆரமும், இடையில் நாகத்திலான அரைஞானும், கால்களில் கழல்களும், கழுத்தில் கபால மாலையும் கொண்டு இச்சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பைரவர் சிவபெருமானின் நெற்றியில் தோன்றியவர் என கடம்பவனப் புராணம் கூறுகிறது. குருரூப பைரவர், அசிதாங்க பைரவர், கால பைரவர், சண்ட பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீசண பைரவர், சம்மார பைரவர் என பைரவர் எண்மர் உளர்.

பிரம்மபுரீஸ்வரர் (சுயம்பு)

கருவறை மையத்தில் லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. சிலிங்கமானது அடியிலிருந்து மேல்நோக்கி பிரம்மபாகம், விஷ்ணுபாகம், ருத்ரபாகம் என மூன்று அங்கங்களாக ஒரே அமைப்பில் செய்யப்பட்டுள்ளது. 6 அடிபான லிங்க வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

வண்டமர் பூங்குழலி அம்மன்

கருவறையில் சுகந்த குந்தளாம்பிகை என்றழைக்கப்படும் வண்டமர் பூங்குழலி அம்மன் பத்மபீடத்தில் சம பாதத்தில் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அம்மனின் பின் கைகளில் அக்கமாலையும், மலர் மொட்டும், வலது முன் கைகளில் அபய முத்திரையும், இடது முன் கை கடிய வலம்பிதமாக உள்ளது. தலையில் கரண்ட மகுடம் தரித்து, கழுத்தணிகள், தோள்வளை , கைவளைகளும் கொண்டு நேர்த்தியான நெற்றியும், வில்போன்ற புருவமும், குவிந்த செவ்விதழ்களுடன் இச்சிற்ப திருமேனி காணப்படுகிறது. இச்சிற்பம் இடைச்சோழர்கால

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கலைப்பாணியாகக் கருதப்படுகிறது.

கற்சிற்பம் (புடைப்புச்சிற்பம்)

கருவறையில் சிவலிங்கத்தின் பின் சுவரில் சோமாஸ்கந்தர் சிற்ப வடிவம் காணப்படுகிறது. இங்கு சிவனும், உமையும் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்க இடையே ஸ்கந்தர் அமர்ந்த கோலத்தில் இளம் குழந்தையாய் காட்சியளிக்கிறார்.

சோமாஸ்கந்தர் உ'ருவம் தனித்தனியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பீடத்தின் மீது இடதுகாலை மடித்து, வலது கலை தொங்கவிட்டு நான்கு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் கிழக்கு திசை நோக்கிய வண்ணம் காட்சியளிக்கிறது. இவரது மேல் வலக்கரம் கடகமுத்திரையில் மழுவாயுதத்தைப் பற்றியுள்ளது. மேல் இடக்கரம் மானின் உருவத்தைப் பற்றியுள்ளது. கீழ் வலக்கரம் அபயமுத்திரையில் காக்கும் கரமாகவும், கீழ் இடக்கரம் வரத முத்திரையிலும் வழங்கும் கரமாக உள்ளது. சிவனது தலையை ஜடாமகுடம் அலங்கரிக்க, மேல் நெற்றியைச் சுற்றிலும் இரத்தின பட்டம், நீள் செவிகளில் மகரக்குழைகளும் அணிச்செய்கின்றன. கழுத்திலும், மார்பிலும் மணிவடம், முத்துவடம் அலங்கரிக்கிறது. இச்சிற்பத்தின் காலம் பொ.ஆ. 11-ஆம் நூற்றாண்டு எனலாம்.

உமை

இச்சிற்ப வடிவம் தனிபீடத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. உமை வலது காலை மடித்து இடது கலை தொங்கவிட்டு இருக்கையின் மீது அமர்ந்துள்ளார். வலக்கரம் கடக முத்திரையில் நீரோத்பல மலரை செங்குத்தாக பிடித்துள்ளது. இடதுக்கரம் வரத முத்திரையில் அருள் வழங்கும் கரமாக அமைந்துள்ளது. தலையை எளிய கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. நெற்றியில் பட்டமும், காதுகளில் வட்ட குழைகள் (பத்ரகுண்டலம்) எனும் ஓலைக்குழைகளும், கழுத்தில் மங்கலநானும் காரையும், மேற்கரங்களில் தோள்வளையும், முன் கைகளில் காப்பும், கைவளையும், குஜபந்தம் எனும் மார்பு கச்சையற்ற தனங்களும், இடது தோளிலிருந்து வலது இடைவரை அணிசெய்யும் புரிநூல், இடையிலிருந்து முழங்காலுக்கு கீழ்வரை இடைக்கச்சையும், பாதங்களில் பாதச்சரமும் இச்சிற்ப வடிவினை அலங்கரிக்கின்றன.

ஸ்கந்தர்

அன்னைக்கும், அத்தனுக்கும் இடையே குகனுடைய சிற்ப வடிவம் இருக்கரங்களுடன் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. குழந்தை முருகனின் இளந்தலையை சிறிய எளிய கரண்ட மகுடம் அலங்கரிக்கிறது. காதுகளில் குழைகளும், கழுத்தில் கழுத்தணியும், கரங்களில் காப்பும், இடையில் அரைஞானும் தரித்து சிற்றிலம் குழந்தை வடிவில் முருகனுடைய தோற்றம் காட்சியளிக்கிறது.

பொதுவாக சோமாஸ்கந்தர் சிற்ப வடிவினை கருவறை சுவரில் செதுக்கி அமைக்கும் பழக்கம் பல்லவர் காலத்தில் தோன்றியது எனலாம். தொண்டை நாட்டில் சோழர்கள் எடுத்த கோயில் ஒவ்வொன்றிலும் சோமஸ்கந்தரை கருவறை சுவரில் அமைக்கும் வழக்கினை காணமுடிகிறது. இது பல்லவர் கால மரபின் தொடர்ச்சி எனலாம்.

முடிவுரை

தமிழகத்தில் காணப்படும் சிறப்புமிக்க திருத்தலங்களுள் நன்னிலம் வட்டத்திலுள்ள அம்பர்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பிரம்மபுரீஸ்வரர் கோவில் மிகச்சிறப்புமிக்கதாக உள்ளது. இத்தலம் சோழர்கள் காலம் தொடங்கி இன்றுவரை சிறப்புமிக்க ஊராகவும் திகழ்கிறது என்பதை அறியலாம்.

இக்கோயிலின் சிறப்பு சோழர்காலம் முதல் பல்லவர், பாண்டியர், விஜய நகர மற்றும் நாயக்கர் காலத்திலும் அம்பர் சிறப்புக்குரியதாக காணப்படுகிறது.

கோச்செங்கணால் கட்டுவிக்கப்பட்டதாக கருதினாலும் விஜயகநகர காலம்வரை கட்டுமானத்திலும் பல வளர்ச்சியைக் கொண்டு இன்றளவும் சிறப்புடன் திகழ்கிறது.

ஒரு ஆலயத்தின் சிறப்பை வெளிப்படுத்துவது அதன் சிற்பக் கலையாகும். இந்த அம்பல் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயில் சிறப்பு, அக்கால மக்களின் வாழ்க்கை சித்தரிக்கும் சிற்பங்கள், ஓவியங்களும் சிறப்புமிக்கதாக காணப்படுகின்றன.

பார்வை நூலகள்

1. திருஅம்பர் தலபுராணம் – சரஸ்வதி அம்மன் ஆலய வெளியீடு, சென்னை – 5.
2. பெரிய திருவாய்மொழி - 15
3. தண்டபாணி தேசிகர் – திரு அம்பர் புராணம், ஆண்டவர் பிரஸ், ஆலய வெளியீடு – 1954, 1999, பூந்தோட்டம்.
4. புறநானூறு - 385
5. திருஞான சம்பந்தர் – மூன்று திருமுறைகள் தேவாரம், திருப்புகழ் பாடல்கள்.
6. ARE **No. 237:1754, ARE No.238:1755, ARE No.235-:1756, ARE No.236:1757**
7. **Southern Tamilnadu, India: Micro Structural and elements analysis. Research Articles: Indian Institution of technology (Current Science) Vol.121. No.2 25 July 2021 (PP.239-247)**
8. கோ. வேணிதேவி, இரா. கலைச்கோவன், மலைக்க வைக்கும் மாடக்கோவில்கள் (பக்-18)
9. இரா. நாகசாமி – தமிழக கோயிற்கலைகள், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை. 1976. சென்னை-6, (பக்-17)
10. K.A. Nilakanta Sastri, The Colas, (Madras University of Madras, 1959) P.694.
11. **S.R Balasubramaniyam, Early Cholas Temple (Bombay: Orient Longman, 1971) (P.346)**
12. மா. சந்திரமூர்த்தி, கோ. குலோத்துங்கள் – “கங்கை கொண்ட சோழபுரம்” மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
13. **Craven Roy, Indian Art, A Concise History of Indian art, Delhi, 1976. (Page.63**
14. **சிவாலயத் திருமேனிகள் (ப.329)**
15. **T.A. Gopinatha Rao, Vol. II (PP.205-207)**
16. **கோ.முத்துசாமிப்பிள்ளை, கோயில் அறிமுகம் (பக்.68)**
17. **Dr. Nagaswamy, Master Pieces of Cholas Art, (P.42)**